மங்கள வைபவங்களுக்கு
ஏற்ற பட்டுப் புடைவைகள்
மற்றும் சகல விதமான
ரெடிமேற் வகைகளுக்கு
ராசி சில்க்ஸ்

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் கெற் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான
பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டு சோலை
70, 71A, சிறப்பு அங்காடி
நவீன சந்தை, யாழ்ப்பாணம்

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 09 வெள்ளிக்கிழமை (25 — 11 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 366

# அரசியல் தலைவர்கள், படை அதிகாரிகள் கொலை குறித்து முழு அளவில் விசாரணை

## 3 ஆணைக் குழுக்களுக்கும் உறுப்பினர்கள் அறிவிப்பு

கொழும்பு, நவ. 25

அரசியல் படுகொலைகள் மற்றும் ஆட்கள் காணாமற் போன சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தவிருக்கும் மூன்று ஜனாதிபதி ஆணைக் குழுக்களில் இடம் பெறும் உறுப்பினர்களின் பெயர் விவரங்களை அரசு நேற்று வெளியிட்டது.

வடக்கு-கிழக்கு பிராந்தியத்துக்கான விசாரணைக் குழு உறுப்பினர்களாக ஓய்வு பெற்ற மேன் முறையீட்டு நீதிமன்றத் தலைவர் கே. பாலகிட்னர், மேல் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர் வால்டர் வைத்தியரத்னா, கொழும்புப் பல்கலைக் கழகத்தின் புவியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் டபிள்யு.எல். வில்சன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி திருமதி மனோரி முத்தெட்டுவேகம, கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் அமல் ஜயவர்த்தனா, சட்டத்தரணி ஜயந்தா டீ அல்மேய்டா குணரத்னா ஆகியோர் மேற்கு, தெற்கு மற்றும் சப்ரகமுவா பிராந்திய ஆணைக் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதியரசர்களான ரி. சுந்தரலிங்கம், பி. மடவல, எம். டி. யேசுரத்தினம் ஆகியோர் மத்திய, வடமேற்கு, வடமத்திய, ஊவா பிராந்திய ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விசேஷ ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிப்பதற்கு அமைச்சரவை முடிவு

கொழும்பு, நவம்பர். 25

முக்கிய அரசியல் தலைவர்களினதும் படை அதிகாரிகளினதும் படுகொலைகள் சம்பந்தமாக ஆராயவதற்கு விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

முதலாவதாக திரு. லலித் அத்துலத் முதலியின் படுகொலை பற்றி இக் குழு விசாரணை நடத்தும்.

சந்திரிகாவின் கணவர் விஜயகுமாரதுங்க, ராணுவத் தளபதி டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரத்னா உட்பட பலர் கடந்த காலத்தில் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் பற்றியும் விசாரணை செய்யப்படும்.

ஆணைக்குழுவுக்கு தற்போது சேவையில் உள்ள உயர்நீதிமன்ற நீதி அரசர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்கள் பற்றி அறிவிப்பதற்கான செய்தியாளர் மகாநாட்டில் அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

பிரேமதாஸாவின் மகள் திருமதி. துலாஞ்சலி ஜெயக்கொடி முன்னைய அரசாங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



விசாரணைக் குழுக்கள் நியமிக்கினம் அறிக்கை வெளி வருமோ என்பதுதான் கேள்வி .....!

## காற்றுடன் கூடிய மழை

யாழ்ப்பாணம், நவ. 25

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று முழுவதும் மழையுடன் கூடிய காற்று வீசியது.

வடமராட்சி கடற்பகுதியில் மீனவர்கள் பலர் தொழிலுக்குச் செல்லவில்லை.

சில இடங்களில் காற்றினால் மரங்கள் வீழ்ந்தன.

## பொருள்கள் நேற்று இறக்கப்படவில்லை

### பிளாம்பயானும் திரும்பிச்சென்றது

வடமராட்சி, நவ. 25

கடும் காற்று, கடல் கொந்தளிப்பினால் பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்படவில்லை.

கொழும்பு செல்லவிருந்த 10 நோயாளர்களையும் மூன்று டாக்டர்களையும் ஏற்றாமல் பிளாம்பயான் கப்பல் ஏனைய கப்பல்களான ஹபரண, மாஹோ கப்பல்களுடன் காங்கேசனுக்கு திரும்பிச் சென்றது.

பிளாம்பயான் கப்பலில் கொழும்பு செல்லவிருந்த நோயாளர்களும், டாக்டர்களும் ஏமாற்றத்துடன் யாழ்ப்பாணம் திரும்பினர்.

இ-15-13-173)

## 'மனிதகுண்டுப்பெண்' ஒருவரே காமினி படுகொலைக்குக் காரணம்

### பொலீஸ் மாஅதிபர் உத்தியோகபூர்வ அறிவிப்பு

கொழும்பு, நவ. 25

எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸாநாயக்காவின் படுகொலைக்கு வெடிகுண்டைக் கட்டிக்கொண்ட தற்கொலைப் பெண்தான் காரணம் என்று விசாரணையில் உறுதியாக தெரியவந்திருப்பதாக பொலீஸ் மா அதிபர் பிராங்டி சில்வா நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

காமினியின் கொலைக்கு "மனித குண்டுப் பெண்ணே" காரணம் என்பதை பொலீஸ் மா அதிபர் நேற்றே உத்தியோகபூர்வ அறிவிப்பாக செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்.

படுகொலை செய்யப்பட்ட விதத்தைப் பார்க்கும்போது அதில் விடுதலைப் புலிகளுக்கு பங்கு இருக்கும்போல் தெரிகிறது என்றும் அவர் குறிப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காமினி படுகொலை சம்பந்தமான மேலும் தகவல்கள் கிடைத்துள்ளன

### பொலிஸ்மா அதிபர் கூறுகிறார்

கொழும்பு, நவ. 25

காமினி திஸாநாயக்காவின் படுகொலை சம்பந்தமான பல தகவல்கள் கிடைத்திருப்பதாக பொலீஸ்மா அதிபர் பிராங்டி சில்வா தெரிவித்திருக்கிறார்.

படுகொலைக்குக் காரணமாக இருந்ததாக நம்பப்படும் யுவதியின் தோற்றம், ஆடை அணிகள் அவரால் உபயோகிக்கப்பட்ட ஆயுதங்கள் என்பன பற்றிய தகவல்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

காமினியின் 31 தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை ஆராய்ந்தபோது படுகொலைக்குக் காரணமாக

(4ஆம் பக்கம் பார்க்க)

## நாடு முழுவதும் இன்றும் பரவலாக மழை பெய்யும்

கொழும்பு, நவ. 25

இலங்கையின் தெற்கு கரையோரத்திற்கு அப்பால் கடலுக்கு மேலாக வளிமண்டலத்தின் கீழ் மட்டத்தில் தளம்பல் ஏற்பட்டிருக்கிறது.

இதனால் நாட்டின் அநேகமான பிரதேசங்களுக்கு மேலாக மேகம் சூழ்ந்திருக்கும். குறிப்பாக மலைநாட்டின் அநேகமான பகுதிகளுக்கு மேலாக வடக்கு கிழக்கு திசையில் இருந்து ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும்.

வடக்கு - கிழக்கு மற்றும் தென்மாகாணங்களில் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும். பெரும்பாலும் பிற்பகலில் அல்லது மாலையில் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கொழும்பில் வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று மாலை இவ்வாறு அறிவித்தது.

இதேவேளை –

வங்கக் கடலின் மத்திய பகுதிகளில் நேற்று முன்தினம் உருவாகியிருந்த குறைந்த காற்றழுத்த தாழமுக்கம் இப்போது தமிழ்நாட்டு கரையை ஒட்டி தென்மேற்கு வங்கக் கடலில் குறிப்பிடத்தக்க காற்றழுத்த குறைவு மண்டலமாக காணப்படுகிறது.

இதன் விளைவாக அடுத்த 24 மணிநேரத்தில் தமிழ்நாட்டின் கரையோரப் பகுதிகளில் மழை பெய்யக்கூடும் என்று தமிழ்நாடு வானிலை அறிக்கை தெரிவிக்கின்றது.

(ஒ-4)

## மாவீரருக்கு திரளான மக்கள் குடாநாடு முழுதும் அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ, 25

மாவீரர் வார நிகழ்வு நான்காம் நாளான நேற்று மாவீரர் பந்தல்களில் ஏராளமானமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்துபெய்தமழையையும் பொருட்படுத்தாது மக்கள் வரிசையில் நின்று காத்திருந்து அஞ்சலி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வருகின்றனர்.

பாடசாலைகளில் பரீட்சை இடம் பெற்ற போதிலும் காலை மாவீரர் வணக்கத்தை முடித்துக்கொண்டே மாணவர்கள் பரீட்சையை ஆரம்பிக்கின்றனர்.

காலை வேளையில் மக்கள் அன்றாடகடமைகளில் ஒன்றாக மாவீரர் அஞ்சலியை முடித்துக் கொண்டு தமது நாளாந்த நடவடிக்கையில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அரச மரியாதையுடன் பாப்பரசருக்கு வரவேற்பு

எதிர்வரும் ஜனவரி 20 இல் கொழும்பு வரும் பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் விமானநிலையத்தில் அரசமரியாதையுடன் வரவேற்கப்படுவார்.

பாப்பரசரைக் கௌரவிக்குமுகமாக கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் படையினரின் மரியாதை அணிவகுப்பும் இடம் பெறும். பின்னர் ஜனாதிபதி மாளிகைக்கு பாப்பரசர் விசேட மோட்டார் பவனியில் அழைத்து வரப்படுவார்.

இத்தகவல்கள் கொழும்பு துணைப் பேராயர் மல்கம் றஞ்சித் தலைமையில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் வெளியிடப்பட்டன.

(ஒ-எ)

## கிளாலி படகுச் சேவை இன்றும் நாளையும் இல்லை

யாழ்ப்பாணம், நவ. 25

இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் கிளாலி — பூநகரி படகுச் சேவை இடம்பெறமாட்டாது என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர்.

(இ)

## பலாலியில் விடுவிக்கப்பட்ட 7 பேரும் நேற்று யாழ். வந்து சேர்ந்தனர்

நேற்று முன்தினம் பலாலியில் வைத்து படையினரால் விடுவிக்கப்பட்ட ஏழு பேரும் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

காங்கேசன்துறையில் இருந்து பிளாம்பயான் கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்துசேர்ந்த இவர்கள் செஞ்சிலுவைச்சங்க வாகனம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வினாசித்தம்பி கணபதிப்பிள்ளை (வயது 48), அவரின் மனைவி கணபதிப்பிள்ளை பரமேஸ்வரி (வயது 42), மற்றும் லெனாட் மரியம்மா (வயது 45), இராமுப்பிள்ளை கனகரத்தினம் (வயது 64), வைத்திமனுவேற்பிள்ளை (வயது 48), யேசுராசா அந்தோனிப்பிள்ளை (வயது 50), வைத்திலிங்கம் இராசரத்தினம் (வயது 45) ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

மாதகல் - சில்லாலைப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த இவர்கள் கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை தமது பழைய இடங்களுக்குச் சென்று விறகு வெட்டியபோது படையினரிடம் சிக்கியது தெரிந்ததே.

(இ-15-173)

## இரு டாக்டர்களுக்கு ஓய்வு: மந்திகை ஆஸ்பத்திரியில் வைத்திய சேவை பாதிப்பு

வடமராட்சி, நவ. 25

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில், நேற்று வைத்திய சேவைகள் பெரிதும் பாதிப்படைந்தன. கிளினிக்குகள் நடைபெறாததால் பலர் ஏமாற்றத்துடன் வீடு திரும்ப நேரிட்டது.

இதுவரை காலமும் கடமையாற்றிய இரு டாக்டர்கள் நேற்று முன்தினம் (புதன்) முதல் இளைப்பாறிச் செல்வதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

60 வயதை பூர்த்தியடைந்தவர்கள் இனி கடமையாற்ற முடியாது என்ற அறிவிப்பை அடுத்து இந்த இரு டாக்டர்களையும் யாழ். பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் கடமையில் இருந்து நிறுத்திவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரியாக இதுவரை காலமும் சேவை புரிந்து வந்த டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை, குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். இராஜலிங்கம் ஆகிய இருவருமே ஓய்வில் சென்றவர்கள் ஆவர்.

இவர்கள் இருவரும் கடமையில் இருந்து விடுவிக்கப்பட்டபோதும் பதிலாக வேறு எவரும் நியமிக்கப்படவில்லை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-173)

## இராணுவத்துடன் சேர்ந்து விசாரித்த தமிழர்களும் எம்மைத் தாக்கினர்!

### விடுவிக்கப்பட்டவர்கள் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 25

சிங்கள இராணுவத்தினர் எம்மைப் பிடித்துச் சென்ற போதும், அங்கு [illegible] எம்மை விசாரித்தவர்களும் தாக்கியவர்களும் [illegible] களே. அவர்கள் பேசிய தமிழில் இருந்து அவர்கள் தமிழர்களாகத்தான் இருக்க வேண் [illegible] பலாலியில் இருந்து விடுவிக்கப்பட்டு [illegible] யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தவர்கள் உதயன் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

படையினரிடம் சிக்கிய ஏழு [illegible] பெண்கள் இருவரை [illegible] படையினர் இளவாலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிட்டு பூங்கா 27 ஆம் திகதி முழு நாளும் திறந்திருக்கும்

### கட்டணம் அறவிடப்படமாட்டாது

யாழ்ப்பாணம், நவ. 25

கேணல் கிட்டு நினைவுச் சிறுவர் பூங்கா மாவீரர் நாளை முன்னிட்டு 27 ஆம் திகதி (26 இரவு 12 மணி தொடக்கம் 27 இரவு 10 மணிவரை) மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்துமுகமாக திறந்து வைக்கப்படும்.

அன்று பூங்காவினுள் செல்வதற்கு கட்டணம் ஏதும் அறவிடப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## காரைநகரில் கடற்படை கப்பலை தகர்க்க திட்டம்

### கடற்படைப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, நவ. 25

காரைநகர் கடற்படை முகாமின் பாதுகாப்பு எல்லைக்குள் ஊடுருவி கப்பல் ஒன்றைத் தாக்கி அழிப்பதற்குக் கடற் புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்பதை நிராகரித்து விட முடியாது என்று கடற்படைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இத் தகவலை 'த. ஐலண்ட்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இதே வேளை —

வட பகுதியில் கடற்படை நடவடிக்கைகளைச் சீர்குலைப்பதற்காக விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக தாக்குதல் முயற்சிகளை மேற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

கல்வியங்காடு, பருத்தித்துறை பிரதான வீதி அருகில் வீடு கட்டக்கூடிய நிலப்பரப்பு இரண்டரை காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. இருமருங்கிலும் சுற்று மதில். பார்வையிட்டு விலை பேசித் தீர்க்கலாம். தொடர்பு: கனகரட்னம் கேசவன், சட்டத்தரணி, கல்வியங்காடு. (33880)

### இசைக்கருவி

நல்ல நிலையிலுள்ள பொங்கோஸ் ஒன்று உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தீசன் ஸ்ரோர்ஸ், 14A, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (33832)

### ஆண்டு - 4 வினாத்தாள்

ஆண்டு 4ற்கு மாதந்தோறும் வெளியிடப்படும் மாதிரி வினாத்தாள்கள் 26-11-94 சனிக்கிழமை வெளியிடப்படும். தேவையானோர் தொடர்பு கொள்ளவும். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (33872)

### தவறிவிட்டது

இ. இராசையா ஆகிய எனது 322961677 V இலக்க அடையாள அட்டை 19-11-94 இல் கந்தரோடை, சுன்னாகம் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இ. இராசையா, கந்தரோடை, சுன்னாகம் என்ற முகவரிக்கு தயவுசெய்து அனுப்பி வைக்கவும். (33878)

### பெற்றுக்கொள்ளுங்கள்

நீரிழிவு நோயாளருக்கெனப் பாவிக்கக்கூடிய ஆட்டாமா, குரக்கன் மா, ஒடியல் மா, வறுத்த உழுந்து மா பச்சை உழுந்து மா, தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பெற்றுக்கொள்ளுமிடங்கள்: அண்ணா கோப்பிக் கடைகளான யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில் கடைகள். (9631)

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 15 — 04 — 1925

இறப்பு: 05 — 12 — 1993

### அமரர் மருதப்பா பாலசிங்கம்

(ஓய்வுபெற்ற ஓவசியர்)

திதி: 25 — 11 — 1994

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத்தெய்வமே! எம்மை விட்டு ஆண்டொன்று சென்றாலும், உங்கள் உருவமும், நினைவுகளும் எம்மை விட்டு பிரியவில்லை எனும் நினைவுடன் வாழ்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்;

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

73, கண்டி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(சி-9731)

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் கல்லூரி ஆசிரியை திருமதி செல்வராணி சின்னையாவின் தகப்பனாரும், முதன்மை ஆசிரியர் திரு. த. மு. சின்னையா அவர்களின் மாமனாருமான

### அரியகுட்டி செல்லத்துரை

அவர்களின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்தித்து அவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அஞ்சலிக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்,
உத்தியோகத்தர், மாணவர்.

யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

(சி-5734)


## தமிழ்ப் பிரதேசத்தில் வர்ணப்பட பிரதியாக்கல் இயந்திரங்கள் \ தொழில் நுட்பம்

**COLOUR PHOTO FINISHING MACHINARIES / TECHNOLOGY**

## "ஓர் அறிமுகம்"

### ஸ்ருடியோ மற்றும் இத்துறை சார்ந்தோருக்கான சிறப்புச்செய்தி

**நீங்களும் வர்ணப் பிரதியாக்கம் செய்ய முடியும்**

* நீங்கள் விரும்பும் முதலுக்கு ஏற்ற இயந்திரங்கள்/தொழில்நுட்பம் [ரூபா 90,000 00 — ரூபா 120 லட்சம் வரை]
* ஆரம்பம் முதல் நிறைவு வரை ஆலோசனை வழங்கவும், தேவை ஏற்படின ஆய்வு கூடத்தை நிறுவித்தரவும், தொழில் நுட்பப் பிரச்சினை உருவாகும் போதெல்லாம் அவற்றை ஆராய்ந்து தீர்த்து வைக்கவும் ஆயத்தமாய் உள்ளோம்.
* உங்கள் வெற்றிக்கு **NORITSU, FUJI, KONICA, KODAK, DURST** போன்ற முன்னணி நிறுவனங்களினுடனான எமது நெருங்கிய தொடர்பு உறுதியளிக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.
* நீங்கள் தெரிவுசெய்து அனுப்பும் ஊழியர்களுக்கு விரைவுப் பயிற்சியை இலவசமாக வழங்கி தொடர்ந்து 6மாத காலம் பயிற்சியை உங்கள் ஆய்வு கூடத்திலும் வழங்குகின்றோம்.
* உங்கள் சுயமான வளர்ச்சி இம்மண்ணின் வளர்ச்சி.

உங்கள் தெரிவுக்கு விடைகாண
நேரிலோ, கடித மூலமோ
தொடர்பு கொள்ளுங்கள்

★ இத்துறையின் வளர்ச்சிக்கு உரமிட்டிடுவோம் ★

யாழ் நகரில்:
'கலக்சி' புகைப்பட சேவை,
337 1/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வவுனியா நகரில்:
'கலக்சி',
இல. 61, 1ஆம் மாடி,
பஸ் நிலையம்,
வவுனியா. T.P. 024 [illegible]

(சி-9734)


## பிறந்ததின வாழ்த்துக்கள்

### செல்வி தர்சினி ஆறுமுகம்

தனது இருபத்தோராவது பிறந்த தினத்தை கந்தர்மடத்தில் உள்ள தனது இல்லத்தில் இன்று (25 - 11 - 1994) கொண்டாடுகின்றார். இவரை பல்கலையும் பெற்று, பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

- நண்பிகள்.

[33879]

## பட்டமளிப்பு விழா

மானிப்பாய் இந்துக்கல்லூரி முறைசாராப்பிரிவில் 90/91 ஆண்டு கல்வி பயின்ற மாணவருக்கான பட்டமளிப்பு விழா 29 11 - 1994 செவ்வாய்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும்: தவறாது சமுகம் தரவும்.

[சி-9632]

— அதிபர்.

## 41-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### ஆறுமுகம் கைலாயபிள்ளை

(வேலணை கிழக்கு - வேலணை, யாழ்ப்பாணம்)

அன்னை மடியில்: 28 — 12 — 1960
ஆண்டவன் அடியில்: 16 — 10 — 1994

மெழுகு போலுள்ளம் நைந்தே உருக
மேதினி தனை விட்டே பிரிந்தாய்
அழுதழுதெங்கள் கண்களில் நீர் வற்றி
ஆனபோதும் மறந்திட மாட்டோம்
தொழுது கெஞ்சினோம் ஆயினும் காலன்
சூழ்ச்சி செய்துன்னைக் கூப்பிட்டதேனோ!
வழுவியும் இங்கு நீ வாராயோ தான்
வாஞ்சையோடு நாம் போற்றிய தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மாமா, மாமி,
மைத்துனர்கள், தாய், சகோதரர்கள்.

குறிப்பு:
இன்று எனது இல்லத்தில் இடம்பெறும் நினைவஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைப் பரிவுடன் அழைக்கின்றேன்.

தகவல்:
சொ. மதியாபரணம் (மணியம்),
12, கண்ணபுரம்,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

[8033]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்: 27 — 06 — 1944

மறைவு: 26 — 10 — 1994

அமரர்

### சுப்பிரமணியம் சிவலோகநாதன்

(இலங்கை மின்சாரசபை, மின்விநியோகப்பாளர் சுன்னாகம்)

திதி: 25 — 11 — 1994

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்ட அன்னாரின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொண்டு ஆறுதல் அளித்த அனைவருக்கும், அஞ்சலிகள், அனுதாபச் செய்திகள், அனுப்பியவர்களுக்கும், ஒத்தாசை வழங்கியவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (25-11-1994) வெள்ளிக்கிழமை நடைபெறும் 31ஆம் நாள் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரங்கள்.

ஐயனார் கோவிலடி,
சுன்னாகம்.

[7817]

## யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி

### ஆண்டு - 6 அனுமதி

★ மேற்படி வகுப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தி நேரிலோ தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கவும்.

★ முதனிலைத் தேர்வு பெறுபேறுகளின் (ஆண்டு-5) அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

— அதிபர்.

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[33881]

## நவசக்தி அர்ச்சனை

### தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில்

26-11-1994 (சனிக்கிழமை) பகல் 10.00 மணிக்கு விசேட அபிடேகம், பூசை, நவசக்தி அர்ச்சனை கூட்டு வழிபாடு என்பன இடம்பெறும். அம்பாள் அடியார்களை இவ் வழிபாட்டில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

மு. பரமலிங்கம்
விழா உபயகாரர்,

(33883)

ஓம்
ஜெய் பிரேம சாந்தி

## நன்றி நவிலல்

அருள்மிகு

### சுவாமி பிரேமானந்தா மகரிஷி

அவர்களின்

### 43 ஆவது ஜயந்தி விழா

### பஜனை மண்டபத் திறப்புவிழா

17 - 11 - 1994 இல் எமது ஆச்சிரமத்தில் நடைபெற்ற மேற்படி விழாவிலும், 22 - 11 - 1994 இல் நடைபெற்ற சுவாமி ஜனன நட்சத்திரமான திருவாதிரை விசேட பிரார்த்தனையிலும் கலந்து சிறப்பித்த பெரியோர்கள், கலைஞர்கள், தமிழீழ காவல்துறையினர், சிரமதானப்பணி செய்த அன்பர்கள் மற்றும் சகலவிதத்திலும் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எமது நன்றியறிதலை தெரிவிப்பதோடு, எல்லாம் வல்ல சுவாமிகளின் அருளாசிகள் கிடைக்கட்டும் என சுவாமிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஜெய் பிரேம சாந்தி!

என்றும் தங்கள் ஆன்மீக சேவையிலுள்ள
ஒருங்கிணைப்பாளர்

பூபாலகிருஷ்ண ஆச்சிரமம்,
சுன்னாகம்.

(சி/5745)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

சுத்திகரிப்பு /
பொதுத் தொழிலாளர்
(அமைய)

### பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாண மாநகர சபை அமைய அடிப்படையில் தொழிலாளர் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தீர்மானித்துள்ளது.

தகைமைகள்

01: கல்வி: 5 ஆம் வகுப்பில் சித்தி
02: வயது: 18 வயது தொடக்கம் 45 வயது வரை
03: யாழ்ப்பாண மாநகர சபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் தாமே தயாரித்த விண்ணப்பத்துடனும், தமது தகைமைகளை நிரூபிக்கும் மூலச் சான்றிதழ்களுடனும், தேசிய அடையாள அட்டையுடனும் 03 - 12 - 94 ஆம் திகதியன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் பண்டார மாளிகை வளவில் அமைந்துள்ள மாநகர சபை ஆணையாளர் அலுவலகத்திற்குச் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர் யாழ்ப்பாணம்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 22 - 11 - 94

(சி/9735)

## கண்ணீர் அஞ்சலி

### சின்னார் இராசசிங்கம்

[நொத்தியாவத்தை - சுன்னாகம்]

எமது சங்கத்தின் அங்கத்தவராக இருந்த சின்னார் இராசசிங்கம் 24 11-94 ல் அகால மரணமான செய்தி கேட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவர்களின் குடும்பத்திற்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று 25-11-94 நடைபெறும் இறுதிக் கிரியைகளில் அனைத்து அங்கத்தவர்கள், பணியாளர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்,
சுன்னாகம் பனை தென்னை வள,
அபிவிருத்தி கூ. சங்கம்.

சி/5744

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## நோக்கம் என்ன?

மட்டக்களப்புக் காட்டுப் பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பாரிய படை நடவடிக்கை ஒன்றைத் தொடங்கியுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழர் வாழும் பிரதேசங்களில் அதிரடிப்படையினரால் சுற்றிவளைப்பு, தேடுதல் நடத்தப்பட்டு தமிழர்கள் கண்டபடி கைதுசெய்யப்படுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பாடசாலைகளில் இன்னும் இராணுவத்தினரின் முகாம்கள் அமைந்துள்ளன. அதனால் மாணவர்களின் கல்வி தொடர்ந்தும் பாதிக்கப்படுகிறது; பாழடிக்கப்படுகிறது.

பொன்னாலைப் பகுதியில் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வடமராட்சிக் கடற்பரப்பில் ஹெலி, புக்காரா நோட்டம்.

கிழக்கிலும் வடக்கிலும் நிலவும் நிலைமை பற்றிய இந்தச் செய்திகள் உணர்த்துவது என்ன?

புதிய அரசாங்கத்தினது—சந்திரிகா அரசினது—ஆட்சியிலும் தமிழ்ப் பகுதிகளில் அமைதி நிலவும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. அரசியல் தீர்வு, சமாதானம், அமைதி, நல்லுறவு எல்லோருக்கும் சம அந்தஸ்து என்று அழகான வார்த்தைகளைக் குழைத்து அரசாங்கம் கனியொழுகப் பேசினும், செயல் பழைய அரசின் பல்லவியாகவே இருக்கிறது!

ஓகஸ்ட் பொதுத் தேர்தலிலும் சரி, நவம்பர் ஜனாதிபதித் தேர்தலிலும் சரி, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும், போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றே மக்கள் அரசுக்கு ஆணை கொடுத்தார்கள். அதிலும் ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை மக்கள் அளித்த ஆதரவு காரணமாகவே, வடக்கு-கிழக்கு மக்கள் அள்ளிப் போட்ட வாக்குகள் காரணமாகவே, சந்திரிகாவால் தேர்தல் சாதனை புரிய முடிந்தது.

அப்படியிருக்க, அவரது அதிகாரத்தின் கீழ் இயங்கும் அரச படைகள் தோளையும் வாளையும் தட்டிக் கொண்டு போருக்கு ஆயத்தமாவது ஏன்? பதவிக்கு வந்து, அதிகாரம் கைக்குக் குவிந்து பன்னிரெண்டு நாள்கள் கடந்தும் படை அதிகாரிகளின் தன்னிச்சையான நடவடிக்கைகளை, புதிய ஜனாதிபதியால் நிறுத்த முடியவில்லை என்பதா?

மேலும், போருக்குப் பயன்படுத்தப்படும் பல கோடி ரூபாவை மக்களின் நலனுக்காகப் பாவிக்கப் போவதாகக் கூறிய அரசாங்கம் ஆயுதங்களையும், இராணுவ தளபாடங்களையும் வாங்குவதன் நோக்கம் என்ன?

ரஷ்யாவிடம் இருந்து ஆயுதம் வாங்குவதற்கு முந்திய அரசு செய்த ஏற்பாட்டை ரத்துச் செய்யப் போவதாக முதலில் கூறிய புதிய அரசாங்கம், பின்னர் முடிவை மாற்றியது. போரை நிறுத்துவது அரசின் நோக்கமானால், 350 கோடி ரூபாவுக்கு அந்த ஆயுதங்களை வாங்கத்தான் வேண்டுமா? மேன்மேலும் விமானங்கள், கப்பல்கள் என்று குவிப்பது எதற்காக?

சமாதானம் பேசப் புறப்பட்ட அரசாங்கம், மட்டக்களப்புப் (காட்டு) பகுதியில் இராணுவ நடவடிக்கை தொடங்குவதன் அர்த்தம் என்ன? சமாதானப் பேச்சின் போதும், அதற்குப் பின்னரும் போர் நிறுத்தத்துக்கு அரசு இணங்குவதற்குப் பின்னடித்ததன் தாற்பரியம் இப்போது புரிகிறது! போரா, சமாதானமா என்பதை தீர்மானிக்க முடியாத சலன நிலை என்பதே அது.

சிங்களத் தலைவர்கள் தமிழர்களின் வாக்குகளை வாங்கும் வரை ''வழிந்து'' பேசிவிட்டு, அதன் பின்னர் தாம் நினைத்தபடி நடப்பதும், தமிழர்களை ஏமாற்றுவதும், துன்புறுத்துவதும் இலங்கையின் அரசியல் குணாம்சம். இதனை ஒரு போதும் மாற்ற முடியாது என்று சந்திரிகாவும் அழுத்தி உணர்த்துகிறார். அவ்வளவு தானே... கொழும்பு அரசின் உடை (நிறம்) மாறியதே அன்றி உடம்பு மாறவில்லை!

---

### கடல்வழித் தொடர்புக்கு கடற்புலிகளால் ஆபத்து!

# வான் வழித் தொடர்புகளை மட்டுமே நம்பியிருக்கும் வடக்கு முகாம்கள்!

### விமானப்படையின் பலத்தை அதிகரிக்கும் இக்கட்டான நிலையில் அரசு

கொழும்பு, நவ. 25
வட பகுதிக்கடலில் கடற்படைக் கப்பல்களின் நடமாட்டங்களுக்குக் கடற்புலிகளினால் ஏற்பட்டுள்ள பாரதூரமான அச்சுறுத்தலைக் கருத்திற்கொண்டே விமானப் படையின் பலம் அதிகரிக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வட பகுதியில் ஒதுக்குப் புறங்களில் உள்ள படை முகாம்களுக்கு துருப்புகள், போர்த்தளபாடங்கள் மற்றும் உணவுப் பொருள்களை ஏற்றிச் சென்று இறக்கும் வேலைகளை கடற்படைக் கப்பல்களே மேற்கொண்டு வருகின்றன.

கடற்புலிகளின் திடீர்த் தாக்குதல்கள் கடற்படையினர் கடலில் அச்சமின்றி செயல்பட முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

பலாலி, ஆனையிறவு—வெற்றிலைக்கேணி வலயம், மன்னார்த்தீவு மற்றும் யாழ். குடாநாட்டில் மேற்கில் உள்ள சிறுதீவுகளில் நிலைகொண்டுள்ள ஆயிரக்கணக்கான துருப்புக்கள் உணவு மற்றும் பொருள்களின் விநியோகங்களுக்குக் கடற்படையினரையே நம்பியுள்ளனர்.

அண்மையில் வெற்றிலைக்கேணியில் கடற்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்த 'பபதா' கடற்படைக் கப்பல் வடபகுதியில் உள்ள படைமுகாம்களுக்கு விநியோக வேலைகளை மேற்கொண்டு வந்த பிரதான கப்பலாகும்.

கடற்புலிகளின் தாக்குதல் தொடரும் ஆபத்து இருப்பதால், விநியோக வேலைகளை மேற்கொள்வதற்கு விமானப்படையின் வான் போக்குவரத்துத் திறமையைப் பலப்படுத்த வேண்டியுள்ளது என்று இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி ''ஐலண்ட்'' செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசு கொள்வனவு செய்யவிருக்கும் ''அன்ரொனோவ் 32 பி'' போக்குவரத்து விமானம் பொருள்களுடன் 50 துருப்புக்களையும் ஏற்றிச் செல்லக்கூடியதாகும்.

எம். ஐ- 17 ரக போக்குவரத்து ஹெலிக்கொப்டர் 30 துருப்புக்களை ஏற்றிச் செல்லக்கூடியது என்று தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக அரசு கேள்விப் பத்திரங்களை சர்வதேச ரீதியில் கோரியுள்ளது. எதிர்வரும் 8 ஆம் திகதி விண்ணப்பிக்கும் கடைசித் திகதியாகும்.

3 அல்ரோனோவ் 32 பி.ரக விமானங்களையும், 6 எம்.ஐ. 17 ரக ஹெலிக்கொப்டர்களையும் இதன் கீழ் மிக விரைவில் கொள்வனவு செய்ய அரசு தீர்மானித்துள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அன்ரனோவ், எம் ஐ ரக விமானம் மற்றும் ஹெலிக்கொப்டர்களை இந்தியா உட்பட 24 க்கு அதிகமான நாடுகள் உலகில் இன்று பயன்படுத்தி வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.
(ஐ-எ)

---

### ஐ. தே. க. ஆட்சிக்காலத்தில்

# ஜனசக்தி குடும்பங்களின் சேமிப்பு எந்த வங்கியிலும் இடப்படவில்லை

### விசாரணை மூலம் அம்பலம்

கொழும்பு, நவ. 25
ஜனசக்தித் திட்டத்தின் கீழ் இரண்டு வருடகாலம் உதவி பெற்றுவந்த குடும்பங்களின் சார்பில் உறுதியளிக்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா சேமிப்புப் பணத்தை முன்னைய ஐ.தே.க.அரசு எந்தஒரு வங்கியிலும் வைப்புச் செய்யவில்லை.

விசாரணைகளில் இருந்து இது தெரியவருவதாக அமைச்சர் எஸ். பி, திஸநாயக்கா அறிவித்திருக்கிறார்.

ஜனசக்தித் திட்டக் குடும்பங்களுக்கு தற்சமயம் வழங்கப்படும் மாதாந்தம் 250 ரூபா கொடுப்பனவு வங்கி வைப்பு நிதியில் இருந்து பெறப்படும் வட்டி அல்ல என்றும்— இது திறைசேரியினால் வழங்கப்படும் நிவாரணக் கொடுப்பனவு என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனசக்தி திட்டத்தின் கீழ் தெரிவான சகல குடும்பங்களுக்கும் தற்போதைய அரசு கொண்டு வந்துள்ள சுபீட்சத் திட்டத்தின்கீழ் சகல நன்மைகளும் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.
(ஐ-எ)

---

### 1990இல் கிழக்கு பல்கலைக்கழகத்தில் இருந்து

# காணாமற்போன 150 தமிழர் குறித்து ஆணைக்குழு அமைத்து விசாரிக்குக!

### ஜனாதிபதிக்கு மகஜர்

கொழும்பு, நவ. 25
1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் திகதி வந்தாறுமூலையில் உள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தில் இருந்து விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்ட 150 தமிழர்கள் பின்னர் காணாமற்போன சம்பவம் குறித்து தனியான ஒரு ஆணைக் குழு அமைத்து விசாரிக்கும்படி ஜனாதிபதி சந்திரிகாவுக்கு மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சம்பவதினம் பல்கலைக்கழக அகதி முகாமில் தங்கியிருந்த சுமார் 10 ஆயிரம் அகதிகளில் 150 பேரை சீருடை அணிந்த படையினர் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். அவர்களில் எவருமே திரும்பி வரவில்லை. இதற்கு அங்கிருந்த அகதி மக்களே சாட்சிகளாக உள்ளனர். இதனை யார் செய்தார்கள்? அவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் உயிருடனா அல்லது இறந்த பின்னரா தகனக்கிரியைகள் நடத்தப்பட்டன? அடக்கம் செய்யப்பட்டால் அது எவ்விதம் நடைபெற்றது? இவற்றை அறிந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க தனியான ஆணைக்குழு நியமித்து விசாரணை நடத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சந்திரிகாவுக்கு அனுப்பப்பட்ட மகஜரில் கோரப்பட்டுள்ளது.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி இம் மகஜரை அனுப்பியுள்ளது.
(ஐ-எ)

---

# தமிழினத்தின் வரலாற்றுக்கு புதுவடிவம் தந்த சிற்பிகள்

தமிழீழத்தில் எம்மோடு வளர்ந்து, எம்மோடு வாழ்ந்து எமது சுதந்திர பூமியை மீட்டு எமது உரிமைகளைப் பெற்றுத் தந்து எமக்கிருக்கும் அனைத்து ஒடுக்குமுறைகளையும் நீக்கி எம்மை சுதந்திர தமிழீழத்தில் சுதந்திரமாகவும், சுயதேவைகளைப் பூர்த்திசெய்பவர்களாகவும் வாழவைக்க தம்முயிரைத் தற்கொடையாக்கிய அந்தப் புனிதர்களை நினைவிற்கொள்வது ஒவ்வோர் தமிழரினதும் வரலாற்றுக் கடமையாகும்.

தன்னலத்தை தகர்த்தெறிந்து தமிழ் மக்களின் நன் நலங்களைப் பெற்றுக் கொடுக்க தன்மான உணர்வோடும், தமிழினத்தின் பற்றோடும் தன் கழுத்தில் தஞ்சணிந்து உறவுகளை மறந்து மறவர் தமிழ்ப்படையாக மாறி, மாற்றான்படைகளை எம் மண்ணில் இருந்து அகற்றுவதற்காய் அல்லும் பகலும் அயராது விழித்திருந்து உழைத்தவர்கள் தான் எமது உள்ளத்தால் நினைவிற்கொள்ளும் உத்தம வீரர்கள்.

களத்திலே எதிரிபடைகளை வென்றவர், கொடுமைகள் தந்த எதிரி முகாம்களை அழித்தவர், அந்நியப் படையை அகற்றிய வீரர்கள், சாத்வீகத்தின் சரித்திரம் மாற்றியவர், கரும்புலியாகக் காற்றோடு கலந்தவர், கடல் புலியாகிக் காவியம் படைத்தவர், உலகமே வியக்கும் உயர்நிலை பெற்றவர், வரலாற்றுக்கு புதிய வடிவம் கொடுத்த சிற்பிகள். தமிழின வரலாற்றில் புதிய பரிணாம வளர்ச்சிக்கு வழி சமைத்தவர்.

இவர்கள் எம் உறவினர்கள், இந்த மண்ணின் மைந்தர்கள், மங்கையர்கள் இதனால் இவர்களின் அளப்பரிய சாதனைகளை, தற்கொடைகளை இக்காலத்தில் பகிர்ந்து கொண்டு பெருமைகொள்வதுடன், அவர்கள் காட்டிய அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க புனிதப் பாதையிலே புறப்பட்டுச் செல்வோம். அந்த இலட்சிய வீரர் எம் முடன் இருக்கின்றார்கள் எனும் உணர்வுடன் அவர் பாதையில் ஒன்றிணைந்து செல்வோம் செயற்படுவோம், வெற்றிகொள்வோம். சுதந்திர தமிழீழத்தை அமைத்து அந்த உத்தம மாவீரர்களின் கனவுகளை நனவாக்குவோம்.

வடமாகாண பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசம்.

---

# நெஞ்சில் விடுதலைத் தீயை வளர்க்கும் புனித நாட்கள்

ஸ்ரீலங்கா பேரினவாதத்தின் கொடூரக் கரங்களின்று மொழியை, பண்பாட்டை பொருண்மியத்தை, தாயகத்தைக் காக்கப் போராடி தமது சாவை சாதனையாக்கி வீரச்சாவடைந்துவித்தாகியவர்கள் மாவீரர்கள். இவர்களது நினைவுகளை கனவுகளை எமது நெஞ்சில் இருத்தி விடுதலைக் கனலை வளர்ப்பதற்கான புனித நாட்கள் தான் மாவீரர் வார நாட்கள். தேசியத் தலைவரது வழிகாட்டலில் எந்த வல்லாதிக்க சக்தியின் ஆதிக்கத்திற்கும் ஆட்படாது போராடிக் கொண்டிருக்கிறோம்.

தேசிய விடுதலைப்போராட்டத்தின் பாதையில் ஒளிப்பிழம்பாக வழிகாட்டி நிற்கிறார்கள் மாவீரர்கள். மாவீரர்களது வீரம், ஈகம் அனைத்துலகத்தையும் வியந்து நிற்க வைத்துவிட்டது. புதிய புறநானூற்றில் போர்ப் பரணியாக இவர்களது வீரம் விளங்குகிறது. மாவீரர்கள் வாரத்தில் மாவீரர் ஆலயங்களுக்கு திரண்டு சென்று மலரஞ்சலி செலுத்துவோம். மாவீரர் நாளன்று இரவு 12-01 செக்கனுக்கு மாவீரர் மூச்சாக எங்கும் ஆலய மணிகளை ஒலிக்க எமது உணர்வுகளை ஒழுங்குபடுத்தி மௌன அஞ்சலி செலுத்துவோம். 12மணி 2 நிமிடத்திற்கு சுடர் ஏற்றிப் போற்றுவோம். அனைத்து இல்லங்கள் அலுவலகங்கள், பாடசாலைகள், தொழில் நிலையங்கள் மாவீரர் சுடரில் பிரகாசிக்கட்டும் மாவீரர் நாட்கள் பொங்கி வரும் எமது விடுதலை உணர்வுகளை வெளிக்காட்டும் திருநாட்களாக அமையட்டும். விடுதலைப் போராட்டத்தில் மீண்டும் எம்மை அர்ப்பணிக்கும் நாட்களாக புனிதம் பொங்கும் மாவீரர் வார நாட்கள் அமையட்டும்.

வலிகாமம் ஊழியர் கழகம்

---

### புலிகளின் குரல் வானொலியில்

**25 — 11 — 1994**
**வெள்ளி இரவு**

- ★ 8-01 — மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி— ந. கிருஷ்ணா எழுதிய ''மாவீரர் புகழ்பாடுவோம்''
- ★ 8-25 — கணப்பொழுது
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — அரசியல் அரங்கம்—வே. பாலகுமாரன் எழுதிய ''வள்ளுவன் கூறிய உட்பகையும் சிங்களத்தின் எதிர்காலமும்''
- ★ 8-50—வாத்திய கானங்கள்
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**26 — 11 — 1994**
**சனி காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்.
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
- ★ 7-40 — மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி— இ.இராஜேஸ்வரன் எழுதிய ''மாவீரர் இலட்சியங்கள் மாண்டு விடாது''
- ★ 8-00மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்

---

### யாழ் நகரப் பகுதியில்

# தொற்று நோய்கள் பரவும் ஆபத்து!

### சுகாதாரம் பேண வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 25
யாழ். நகரப் பகுதியில் தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து பெய்யும் மழை காரணமாகப் பெரும்பாலும் குடல் சார்ந்த தொற்று நோய்கள் பரவும் ஏதுநிலை காணப்படுவதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

மக்கள் நாளாந்த சுகாதார நடைமுறைகளைப் பேணாவிடில் நெருப்புக் காய்ச்சல், செங்கண்மாரி, வாந்திபேதி, வயிற்றோட்டம், இளம்பிள்ளைவாதம் போன்ற நோய்கள் பரவக் கூடும். சில இடங்களில் நோய் அறிகுறிகள் தோன்றியுள்ளன.

நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கு பின்வரும் பொதுச் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுமாறு யாழ். மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர் திரு. து. மகாதேவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

★ கொதித்தாறிய நீரை அருந்துதல்.

★ உணவுப் பண்டங்களை சமைத்தவுடன் உண்ணுதல்.

★ உணவை மூடி வைத்தல்.

★ வெளியிடங்களில் திறந்த நிலையில் வைத்து விற்பனை செய்யப்படும் உணவுப் பண்டங்களை உண்பதை தவிர்த்தல்.

★ மலகூடத்தில் மலம், சலம் கழித்தல் அல்லது மலத்தை பாதுகாப்பான முறையில் புதைத்தல்

★ மலகூடம் சென்ற பின்பும் உணவு உட்கொள்ள முன்பும் கைகளை சவர்க்காரம் கொண்டு நன்கு கழுவுதல்.
(ஐ-17)

---

### மாத்தளைமாநகர ஐ.தே.க. பிரமுகர்

# ஹுசேன் கொலை பற்றி கூரேயிடம் வாக்குமூலம்

கொழும்பு, நவ. 25
மாத்தளை மாநகர சபை ஐ. தே. க. உறுப்பினர் ரஸ்மார் ஹுசேன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் ஐ. தே. க. அமைச்சர் சிறிசேன கூரேயின் வாக்குமூலம் பதிவு செய்யப்படவிருப்பதாக இரகசியப் பொலீஸ் அதிபர் அறிவித்துள்ளார்.

இக்கொலை வழக்கு அண்மையில் மாத்தளை நீதிவான் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இத்தகவல் வெளியிடப்பட்டது.

சிறிசேன கூரேயின் வாக்குமூலம் பதிவு செய்யப்படும் வரை சொத்தி உபாலி உட்பட 12 சந்தேக நபர்களையும் பிணையில் விடுதலை செய்ய வேண்டாம் என்று இரகசியப் பொலீஸ் அதிபர் பி. அம்பவல நீதிவானிடம் விண்ணப்பித்தார்.

விண்ணப்பத்தை ஏற்று வழக்கு விசாரணையை நீதிவான் ஒத்திவைத்தார்.

---

# பிரேமதாஸா கொலையில் மேலும் நால்வர் கைது

கொழும்பு, நவ. 25
முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மேலும் நான்கு பேரை தாம் கைது செய்திருப்பதாக பொலீஸ் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொலை தொடர்பான விசாரணையின் இரகசிய அறிக்கை ஒன்றை நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்த புலனாய்வுப் பொலீஸ் அதிகாரி மேற்படி நான்கு சந்தேக நபர்களையும் தடுத்து வைப்பதற்கான உத்தரவை வழங்குமாறு நீதிபதியிடம் கோரியுள்ளனர்.
(ஐ-க)

---

### விசேட சுத்திகரிப்புப் பிரிவினரால்

# பாசையூர் பகுதி வடிகால்கள் சுத்திகரிப்பு வேலை பூர்த்தி

யாழ்ப்பாணம், நவ. 25
யாழ் மாநகர சுகாதார பகுதியின் விசேட சுத்திகரிப்பு பிரிவினர் பாசையூர் பகுதியில் உள்ள வடிகால்களை சுத்திகரிப்புச் செய்து முடித்துள்ளனர்.

அடுத்த கட்டமாக குருநகர் பகுதியில் உள்ள வடிகால்களை துப்புரவு செய்யும் பணியை இப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

வடிகால்களில் இருந்து அகற்றப்படும் சேறு மற்றும் கழிவுகளை ஏற்றி அப்புறப்படுத்த 15வண்டில்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

வடிகால்களை துப்புரவு செய்வதற்கு எனத் தனிப் பிரிவு ஒன்றை யாழ் மாநகராட்சி மன்றம் அமைத்துள்ளது தெரிந்ததே.

---

# நாவலர் குருபூசை தினம் நாளை அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், நவ. 25
நாவலர் குருபூசை தினம் நாளை சனிக்கிழமையாகும். இதனை ஒட்டி குருபூசை நிகழ்ச்சிகள் பல இடங்களிலும் நடைபெறவுள்ளன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பணிமன்றம் ஏற்பாடு செய்துள்ள குருபூசை நிகழ்ச்சி நாளை பிற்பகல் 4 - 30 மணிக்கு திருநெல்வேலி வடக்கு, கலாசாலை வீதி கலாமன்ற மண்டபத்தில் கலாநிதி கி. க. சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும்.

பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திரு. சிவ. மகாலிங்கம், யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. மா. வேதநாதன் ஆகியோர் அதில்சிறப்புரை ஆற்றவுள்ளனர்

★ ★ ★

கந்தர்மடம் கலைப்புலவர் வீதி மெய்கண்டதேவர் ஆதீனத்தில் நாவலர் குருபூசை நாளை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

★ ★ ★

அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் ஏற்பாட்டில் ஆறுமுகநாவலர் குருபூசை விழா நாளை முற்பகல் 10 மணிக்கு நாவலர் கலாசாலை மண்டபத்தில் பண்டிதர் திரு. வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் விழாவில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவார். யாழ். மாநகர ஆணையாளர் திரு பொ பாலசிங்கம் நாவலர் சிலைக்கு மலர் மாலை அணிவிப்பார் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

★ ★ ★

யாழ். சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆறுமுக நாவலர் குருபூசை நிகழ்ச்சிகள் நாளை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.
(ஐ)

---

# சிறில் ரணதுங்கா நாடுதிரும்பினார்

கொழும்பு, நவ. 25
பிரிட்டனில் இலங்கைத் தூதராகப் பணிபுரிந்த முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்கா அண்மையில் கொழும்பு திரும்பினார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்ததை அடுத்து, திருப்பி அழைக்கப்பட்ட தூதர்களில் இவரும் ஒருவர். முந்தைய ஐ. தே. க. அரசு இவரை தூதராக நியமித்து இருந்தது.
(ஐ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## O/L '94

பரீட்சைக்காக எல்லா பாடங்களிலும் மாதிரி பயிற்சி வினாத் தாள்கள் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம்.

அதிக பிரதிகள் எடுப்பவர்களுக்கு 25% கழிவுண்டு

**BOND**
கல்வி நிறுவனம்
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[8031]

## வணிக முகில் சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 25
வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலையில் "வணிக முகில்" என்னும் சஞ்சிகையின் வெளியீட்டு விழா 11ல் வெள்ளி முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் ஆரம்ப பிரிவு மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் கலந்து கொண்டார். (ஐ)

வடமராட்சி
தெற்கு மேற்கு பிரதேசசபை - கரவெட்டி

## கேள்வி அறிவித்தல்-1995

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், பைசிக்கிள் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றை 1995 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 1995 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 12-12-94 முற்பகல் 10-00 மணிவரை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் நெல்லியடி தலைமை அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் யாவும் அவ்வவ் உப அலுவலக பொறுப்பதிகாரிகளால் 9-12-94 நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும்.

மேலும் கேள்விகள் தொடர்பாக மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் உப அலுவலகங்களில் அல்லது தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

செ. ஸ்ரீநிவாஸன்
விசேட ஆணையாளர்,

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி, 21-11-1994. (சி/9737)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் செல்வரட்ணம்

திருநெல்வேலி அரசடி அம்மன் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கரம்பொன் கிழக்கை வதிவிடமாகக் கொண்டவருமான பொன்னம்பலம் செல்வரட்ணம் 22-11-94 இல் ஜேர்மனியில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் இராசமணி தம்பதிகளின் அன்பு மகனும், பாக்கியலக்ஷ்மியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும், சதீஸ்வரன் (ஜேர்மனி), பிரதீஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்லத்துரை - சிவகாமிப்பிள்ளையின் அன்பு மருமகனும், கனகரத்தினம், செல்வலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கோபாலபிள்ளை (வவுனியா றேடர்ஸ் - வவுனியா), ஞானசம்பந்தன் (பாம்கோட் மதுபானசாலை யாழ்ப்பாணம் - நியூ நவதானியா ஸ்ரோர்ஸ் - கிளிநொச்சி), மாணிக்கவாசகர் (ஜேர்மனி), புவனேஸ்வரி, மனோன்மணி (கனடா), மங்கையர்க்கரசி (ஜேர்மனி), திலகவதி (கனடா), காந்திமதி (கனடா), செல்வமதி, தர்மலிங்கம் (இ.போ.ச கோண்டாவில்), ஜெயமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தில்லைநாதன், தர்மராசா (கனடா), செல்வராசா (ஜேர்மனி), சண்முகராசா (கனடா), சோதி, சந்திராதேவி, சீதா (ஜேர்மனி) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று ஜேர்மனியில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. ஞானசம்பந்தன் (பபா)
(மைத்துனன்)

இல. 79, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (33887)

### திருமதி இராயப்பு றோசம்மா

[சில்லாலை]

சில்லாலை தெற்கு சென். யேம்ஸ் வீதியைச் சேர்ந்த திருமதி இராயப்பு றோசம்மா 24-11-94 அன்று காலமானார்.

அன்னார் காலம்சென்ற செபஸ்தியாம்பிள்ளை இராயப்புவின் அன்பு மனைவியும், காலம் சென்ற திரு. திருமதி றேமூந்துப்பிள்ளை அவர்களின் புதல்வியும், காலம்சென்ற பார்பரம்மாள், காலம்சென்ற சீமாம்பிள்ளை, காலம்சென்ற கத்தரினம்மாள், சந்தியாப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பம், ராணி, பேபி, அருட்சகோதரி ஜெம்மா (திருச்சிலுவை கன்னியர் மடம் யாழ்ப்பாணம்), லீலா, பரமானந்தம் (பஞ்சரட்ணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிலிப்பையா, இம்மனுவல், ஸ்ரீபன், சின்னத்தம்பி (தார்சீசியஸ்), அல்வின் (பபா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பபா, ரதி, றெஜி, பபி, அருட் சகோதரி டொறின் (திருக்குடும்ப கன்னியர்மடம் யாழ்ப்பாணம்) ரவி, விஜி, கிறேசியன், லூமின், வுளோறின், லைங்ஸ்ரன், கிளிண்டன், சுஜி, றஜி, ஜெனி, ஜெகன் ஜெலோன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக 26-11-94 முற்பகல் 9 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்கப்படும். பின்னர் பண்டத்தரிப்பு புனித யாகப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பரமானந்தம் [பஞ்சரட்ணம்]
[மகன்]
எட்வேட் பங்கிராஸ்
[பேறாமகன்]

சென். யேம்ஸ் வீதி,
சில்லாலை தெற்கு,
சில்லாலை.
[33886]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட் லிமிற்றெட்டினால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 298/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25-11-1994 இல் அச்சிட்டு வெளி

# லஞ்ச, ஊழல் ஒழிப்புக்கு ஐ.நா.நிபுணர்களின் உதவி

## பெறப்படும் என்கிறார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, நவ. 25
இலங்கை லஞ்சம், ஊழல் ஒழிப்புக்கு ஐ. நா. நிபுணர்கள் மட்டத்திலான ஆலோசனைகளைக் கோரியுள்ளது.

இலங்கையில் இதுவரை இடம்பெற்றுள்ள லஞ்சம், ஊழல் குறித்து உயர்மட்டக் குழு ஒன்றை நியமிப்பதற்கு ஐ. நா. உதவியைப்பெற்றுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

ஐ. நா. கொள்கை அளவில் லஞ்சம், ஊழல்களை ஒழிப்பதற்காக இங்கு ஆரம்பிக்கப்படவுள்ள ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கு உறுதி அளித்துள்ளது என்றும்—

சிங்கப்பூர், ஹொங்ஹொங் போன்ற நாடுகளில் பெரும் அளவில் இடம் பெற்றுவரும் லஞ்சம், ஊழல் பற்றிய தகவல் விசாரணை குறித்த அனுபவங்களையும் ஐ. நா. மூலம் இலங்கைக் குழுவுக்கு வழங்க இணங்கியுள்ளது என்றும் அமைச்சர் பீரிஸ் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

ஆணைக் குழுவுக்கு உதவ ஐ. நா. பிரதிநிதி ரொபேட் இங்கிலின் விருப்பம் தெரிவித்துள்ளதுடன் சிங்கப்பூர், ஹொங்ஹொங் முதலான நாடுகளில் செய்யப்பட்ட விசாரணைகளில் பெறப்பட்ட அனுபவங்களையும் இலங்கைக்குழுவுக்கு வழங்குவதற்கு உறுதி அளித்துள்ளார்.

டிசம்பர் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ள லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரங்களைப் பயிற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், இக்குழு முறையற்றவகையில் பணத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் அரச பதவிகளை முறையற்ற வகையில் பயன்படுத்திய அதிகாரிகள் குறித்தும் விசாரிக்கும் என அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார். (ஒ-க-6)

### நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 25
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மாவீரர் நாளை யொட்டிய சிறப்புப் பதிப்புக்களான சுவடுகள், இதயநாதம், எங்கள் தாய்த் திருநாடு ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (ஒ)

### சீவல் தொழிலாளி விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், நவ. 25
கள் சீவுவதற்காக மரத்தில் ஏறிய சீவல் தொழிலாளி ஒருவர் தவறி விழுந்து மரணமானார்.

சுன்னாகம் கந்தரோடை கொத்தியாவத்தயில் நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த சின்னவன் இராசசிங்கம் (வயது 50) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (இ-15-13)

### ராணுவத்துடன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
யில் உள்ள கொன்வென்ட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

மற்றைய ஐவரையும் காங்கேசன்துறையில் உள்ள பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

சம்பவதினம் சுமார் 30பேர் வரை விறகுவெட்டச் சென்றிருந்ததாகவும் படையினரைக் கண்டவுடன் ஏனையோர் தப்பி ஓடிவிட்டதாகவும் பிடிபட்டவர்கள் தெரிவித்தனர்.

படையினர் தம்மைப் பிடித்தவுடன் கண்களைக் கட்டி அழைத்துச் சென்றதாகவும் —

கண்கள் கட்டப்பட்ட நிலையில் விசாரணை நடைபெற்றதாகவும் —

தம்மை விசாரித்தவர்களும் தாக்கியவர்களும் தமிழர்களே என்பதை அவர்களின் பேச்சுகளில் இருந்து புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். (இ-15)

### 'மனித...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பிட்டார்.

இக் குண்டுத் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டுகிறீர்களா என்ற பத்திரிகையாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த பொலீஸ் மா அதிபர் தம்மால் நேரடியாக இதுபற்றிக் கருத்து எதுவும் சொல்ல இயலாது —

எனினும் இக் குண்டுத் தாக்குதல் விடுதலைப் புலிகளால் செய்யப்பட்ட ஒன்றாக அனுமானிக்க இயலும் எனத் தெரிவித்தார்.

இதற்கிடையில் —

குண்டுத் தாக்குதல் பற்றிய பூரண விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரையும் சமாதானப் பேச்சு வார்த்தையை ஜனாதிபதி சந்திரிகா நிறுத்தி வைத்துள்ளார் என்று வெரித்தாஸ் தெரிவித்தது. (ஒ-2-6)

### 3 ஆணைக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இம் மூன்று ஆணைக்குழுக்களும் தங்கள் பணிகளை ஆரம்பிப்பதற்கான ஆணைப் பத்திரத்தில் ஜனாதிபதி சந்திரிகா விரைவில் கையெழுத்திடுவார் என்று அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார். (ஒ-எ)

### புலிகளுடனான பேச்சு:

## மீண்டும் ஆரம்பிப்பது குறித்து அரசு ஆராய்வு

கொழும்பு, நவ. 25
விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது—

தொடர்பு சாதன அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார். (க-6)

### காரைநகரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொள்ளும் சாத்தியம் இருப்பதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

வட பகுதிக் கடலில் கடற்படையின் ரோந்து நடவடிக்கைகளை மட்டுப்படுத்துவதும் —

கடல் மற்றும் தரைவழித் தாக்குதல்களுக்கு பயன்படுத்தக் கூடிய கப்பல்களை அழிப்பதுமே இத் தொடர் தாக்குதல் முயற்சியின் நோக்கம் என்றும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி "த. ஐலண்ட்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-எ)

### காமினி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இருந்ததாக நம்பப்படும் யுவதி இருந்த 2 இடங்களைக் கண்டு பிடிக்கக் கூடியதாக இருந்தது.

அவர் ஜாஎல, ஹோமாகம கூட்டங்களில் மக்களுக்கு மத்தியில் இருப்பது படம் எடுக்கப்பட்டிருக்கிறது.

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பில் காயமடைந்த 94 பேர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்கள். இவர்களில் ஒருவரைத்தவிர ஏனையோரிடம் பொலீஸார் தகவல்களை பெற்றிருந்தார்கள்.

சரியான தகவல் பெறமுடியாமல்போன நபர் பற்றி பொலீஸார் அவதானத்துடன் இருக்கின்றார்கள் என்றும் பொலீஸ்மா அதிபர் குறிப்பிட்டார். (ஒ-4)

### ஆசிரிய கலாசாலை ஒளி விழா

யாழ்ப்பாணம், நவ. 25
பலாலி ஆசிரிய கலாசாலை கத்தோலிக்க மன்றம் நடத்தும் ஒளி விழா இன்றுவெள்ளி முற்பகல் 9மணிக்கு கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக கிறிஸ்தவ இஸ்லாமியத் துறைத் தலைவர் அருட் கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் கலந்து கொள்வார்,

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர், அருட் கலாநிதி எஸ். ஜெயபாலன் குருஸ், அருட் தந்தை செ. பி. நேசகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

கலை நிகழ்வுகள் பலவும் இடம் பெறும். (ஐ)

### அரசியல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கத்திற்கு விடுத்த வேண்டுகோளைக் கருத்திற்கொண்டு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் படுகொலை பற்றியும் விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். [இ-4]

## மாவீரருக்கு திரளான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஈடுபடுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

கோட்ட ரீதியாகவும், வட்ட ரீதியாகவும் அமைக்கப்பட்ட மாவீரர் ஆலயங்களிலும் அலங்கார பந்தல்களிலும் வைக்கப்பட்ட மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் சென்று மலர் வைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

யாழ். நகரப் பகுதி எழிற்கோலம் பூண்டு காட்சியளிக்கின்றது. எங்கும் அலங்கார வீதி வளைவுகளும், பதாகைகளும், சிவப்பு, மஞ்சள் நிற கொடிகளும் காணப்படுகின்றன.

இதேவேளை, குடாநாட்டிலும் ஏனைய தமிழீழப் பகுதிகளிலும் மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

சிரமதானங்கள், கருத்தரங்குகள் மற்றும் மரம் நடுகை வைபவங்கள் போன்றவை ஒவ்வொரு பகுதிகளிலும் சிறப்புற இடம்பெற்று வருகின்றன. இரவில் மின் அலங்காரத்துடன் பல இடங்களிலும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதனிடையில், அச்சுவேலி மாவீரர் நினைவாலயம் நினைவுச் சுவரோவியம் என்பன புதுமெருகுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

மாவீரர் நினைவாலயத்தை உள்ளடக்கி பெரியளவில் பந்தல் அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருப்பதுடன் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

நினைவாலயத்தை உள்ளடக்கிய வீதிகளில் சிவப்பு-மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு அச்சுவேலி பஸ் நிலையப் பகுதியில் வீதிகள் தோறும் வாழைக் குலைகள் கட்டப்பட்டுள்ளன

வடமராட்சியில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் வணக்க ஆலயங்கள் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. பகலில் மட்டுமல்லாது இரவு நேரத்திலும் பெருந்தொகையானமக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்

மாவீரர் வாரத்தை முன்னிட்டு நோயாளர் நலன் புரிச் சங்கத்தின் அனுசரணையுடன் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் நேற்று குருதிக்கொடை நிகழ்வு நடைபெற்றது.

இதில் பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள், நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் முத்துத்தம்பி மகாவித்தியாலய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் குருதிக்கொடை அளித்தனர்,

இதேவேளை, விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக் கழக மாணவர்களினால் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லமும், கைதடி செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையும் நேற்று காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை சிரமதானமூலம் துப்புரவு செய்யப்பட்டன. (ஒ-15-17-11-4-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### செஞ்சிலுவைச் சங்கத்தின்

## நடமாடும் வைத்திய சேவை நல்ல பயன் அளிக்கிறது

### நோர்வே பிரதிநிதிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 25
இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை நடத்தும் நடமாடும் வைத்திய சேவை இடம்பெயர்ந்த மக்கள் தங்கும் நிலையங்களைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல பயன் அளித்து வருவதை அவதானிக்க முடிந்தது.

இவ்வாறு கடந்த செப்டெம்பர் மாதத்தில் இங்கு விஜயம் செய்திருந்த நோர்வே நாட்டு செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. ரோறில்ட், திரு. ஜோன் பிரேப்றிக் ஆகிய இருவரும் கடந்த செப்டெம்பரில் இங்கு வந்து யாழ்ப்பாணத்தில் உள்ள சுகாதார சேவைகள் குறித்து நேரில் கண்டறிந்து சென்றனர்.

செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை நடத்தும் நடமாடும் வைத்திய சேவையினால் பின்தங்கிய கிராம மக்கள் பெரும் பயன் அடைவதாகவும்—

கிராம ஆஸ்பத்திரிகளும், சிகிச்சை நிலையங்களும் மருந்தின்மை, உபகரணப் பற்றாக்குறை என்பன காரணமாக இயங்கவில்லை என்றும்—

அத்தகைய சூழ்நிலையில் செஞ்சிலுவைச்சங்க நடமாடும் வைத்திய சேவை கிராம மக்களுக்குப் பெரிதும் உதவுவதாகவும்—

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப சங்கத்தின் ஆரம்ப சுகாதார நிலையங்கள், சுய வேலை வாய்ப்புத் திட்டம்: தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆங்கில போதனை, முதலுதவிப் பயிற்சி, கயிறு திரித்தல் பயிற்சி ஆகிய சேவைகளும் பயனுள்ளவையாக அமைந்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-17)

### நேபாள கம்யூனிஸ்ட் 88 ஆசனங்கள்

நேபாளத்தில் அண்மையில் நடைபெற்ற 205 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத் தேர்தலில் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி 88 ஆசனங்களையும் நேபாள காங்கிரஸ் 83 ஆசனங்களையும் பெற்றுள்ளன. (க)

## (கப்) மெழுகுதிரி

பல மணி நேரம் எரியக் கூடிய (கப்) மெழுகு திரி விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. தொடர்பு கொள்க.

கண்ணன் கிதை,
1/2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/9738)

### கொக்குவில் இந்துக் கல்லூரி

## 6 ம் ஆண்டு அனுமதி--1995

விண்ணப்பப் படிவங்களை **28-11-1994** முதல் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 20-12-1994**

அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி

(சி/9739)

வலிகாமம் மேற்கு பிரதேசசபை
சுழிபுரம், சங்கானை,
வட்டுக்கோட்டை, அராலி

## உப அலுவலகங்கள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆவது இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 134, 135, 136, 137 ஆம் பிரிவின் கீழ் 1995 ஆம் ஆண்டிற்கு எமது பிரதேசசபை வரியிறுப்பாளர்களிற்கான ஆதனவரி பற்றிய அறிவித்தல்

**1995**-ம் ஆண்டிற்கான ஆதனவரி கடந்த ஆண்டு மதிப்பீட்டின் பிரகாரமே அறவிடப்படும். ஆதனவரி அறவீட்டு விகிதமும் மாற்றமின்றி இருக்கும். **1995**-ம் ஆண்டு முழுவதற்கும் உரிய வரித் தொகையை ஜனவரி மாதம் **31** ஆம் திகதிக்கு முன் செலுத்துவோரிற்கு **10 %** கழிவும் **1** ஆம், **2** ஆம், **3** ஆம், **4** ஆம் கந்தாயங்களுக்குரிய கட்டணங்களை முறையே ஜனவரி **31**, ஏப்பிரல் **30**, யூலை **31**, ஒக்டோபர் **31** க்கு முன் செலுத்துவோருக்கு **05 %** கழிவும் வழங்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| **1**-ம் கந்தாயம் | — **31-03-95** | முன் செலுத்தப்பட வேண்டும். | |
| **2**-ம் ,, | — **30-06-95** | ,, | ,, |
| **3**-ம் ,, | — **30-09-95** | ,, | ,, |
| **4**-ம் ,, | — **31-12-95** | ,, | ,, |

மேற்குறித்த கால எல்லைக்குள் ஆதனவரி செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்கள் மீது குடியிருப்பு ஆதனமாயின் **15 %** உம், வியாபார நோக்கத்திற்குப் பாவிக்கப்படும் ஆதனமாயின் **20 %** உம், பற்றாணை (தண்டம்) செலவாக அறவிடப்படும். இத்தொகை குறித்த காலத்தில் உரிய ஆதனவரி செலுத்தப்படாவிடில் வரியுடன் சேர்த்துக் கணிக்கப்படும்.

ஆதனவரி சம்பந்தமாக இவ்விளம்பரத்தைத் தவிர வேறு அறிவித்தல்கள் ஏதும் வழங்கப்பட மாட்டாது. ஆதன உரிமையாளர்கள் எம்முடன் தொடர்புகொண்டு தங்கள் ஆதனத்தின் வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும், தங்கள் ஆதனத்தின் உரிமை தங்களால் மாற்றப்படும் போது அல்லது பிரிவிடுதல் செய்து வழங்கப்படும் போது எம்முடன் தொடர்புகொண்டு உரிய வழி முறைகளைப் பின்பற்றி எமது பதிவேடுகளில் பெயர்களை மாற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். மேலதிக விவரங்களை உப அலுவலகங்களிலோ அல்லது தலைமை அலுவலகத்திலோ அறிந்து கொள்ளலாம்

கா. சந்திரராசா
விசேட ஆணையாளர்
வலி மேற்கு பிரதேசசபை.

வலி. மேற்கு பிரதேசசபை,
சுழிபுரம்.
24-11-1994. (சி/9736)